சுருக்கம்

ஆசிரியர் கல்வி – அயல் மாநில ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சி சான்றிதழ்களை மதிப்பீடு செய்வதை கைவிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித்(யு1)துறை

அரசாணை (3டி) எண்.118 நாள்: 03.12.2009

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.1236, கல்வித் (யு) துறை, நாள்:17.09.1984
2. அரசாணை (1டி) எண்.26,பள்ளிக் கல்வித் (யு1) துறை, நாள் :21.02.2003
3. அரசாணை (1டி) எண்.221, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 12.06.2008
4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித ந.க.எண்.12210/அ3/2008, நாள்: 12.02.2009 மற்றும் 1.06.09.

ஆணை:

மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அயல் மாநிலங்களில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியை முடித்தவர்கள், அச்சான்றிதழ் தமிழ்நாட்டில் வழங்கப்படும் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி சான்றிதழுக்கு இணையானது என சான்றிதழ் வழங்குவதற்காக சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், அதன்படி அவர்கள் மேல்நிலைத் தேர்வில் 45% மதிப்பெண்ணும், ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் 50% மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும் என்றும், இவ்விதிமுறைகளின்படி அயல் மாநிலத்தில் பயின்ற மாணவர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால், தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு மதிப்பீடு சான்றிதழ் (Evaluation Certificate) வழங்கப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஆசிரியர் கல்வி பயிலும் மாணவர்கள், அடிப்படை பாடங்கள் மற்றும் மொழிப்பாடம், ஆங்கிலம் கற்பித்தல், கணிதம் கற்பித்தல், அறிவியல் கற்பித்தல் மற்றும் சமூக அறிவியல் கற்பித்தல் ஆகிய பாடங்களை மேற்காண் மதிப்பீடு சாராத பணிகள் மேற்கொள்வதற்கு முன்பு தொடர்ந்து பயின்று வருகின்றனர் என்றும், மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஆணையின்படி ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியின் பாடத்திட்டமானது தேசிய கலைத் திட்டம், 2005-ன்படி மாற்றியமைக்கப்பட்டு, புதிய வளநூல்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் 2008–2009முதல் பின்பற்றப்படுகின்றன என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேற்காண் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படும் முன்பிருந்தே தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் DTE பயின்ற மாணவர்கள் 5 முக்கிய பாடங்கள் கற்பித்தல் முறைகளையும் அடிப்படை பாடங்களையும் கற்று வருகின்றனர் என்றும், அயல் மாநிலங்களில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியினை முடித்து மதிப்பீடு சான்றிதழ் வேண்டி ஒவ்வொரு ஆண்டும் 5000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் பெறப்படுகின்றன என்றும், இவற்றில், 99% விண்ணப்பங்கள் கர்நாடக மாநிலத்தில் பயின்றவர்களிடமிருந்து பெறப்படுகின்றன என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், கர்நாடக மாநிலத்தில், இரண்டாம் ஆண்டு பாடத்திட்டத்தில் உள்ள ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டை மட்டும் தேர்ந்தெடுத்துப் பயிலும் வசதி அளிக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள், சமூக அறிவியல் மற்றும் கணிதம் அல்லது அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களையே தேர்வு செய்கின்றனர் என்றும், பெரும்பான்மையாக மாணவர்கள் ஆங்கில மொழி கற்பித்தல் பாடத்தை தவிர்த்து விடுகின்றனர் என்றும், தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியில் முதல் மொழி கற்பித்தல், இரண்டாம் மொழி(ஆங்கிலம்) கற்பித்தல், கணிதம், அறிவியல்,சமூக அறிவியல் கற்பித்தல் ஆகிய பாடங்கள் அனைத்தும் கட்டாய பாடங்கள் ஆகும் என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. எனவே, அயல் மாநிலங்களில் மாணவர்கள் பெறும் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி, தமிழ்நாட்டில் வழங்கப்படும் கல்வித் தரத்திற்கு இணையானதாக இல்லை என்றும் , மேலும், அம்மாணவர்கள் தேர்ந்தெடுத்து பயிலும் ஒரு சில பாடங்களில் 50% மதிப்பெண் பெற்றுள்ளார்களா என்று மட்டும் பார்த்து அச்சான்றிதழ்கள் தமிழ்நாட்டு சான்றிதழ்களுக்கு இணையானவை என சான்றிதழ் வழங்குதலில் கல்வித் தரமும் அடிப்படை கருத்துகளும் முக்கியமாக இல்லை என்றும், தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் கட்டாயமாகப் பயிலும் பாடங்களை அம்மாணவர்கள் பயிலாத போது கர்நாடக மாநிலம் வழங்கியுள்ள சான்றிதழ்களை, தமிழ்நாட்டில் வழங்கப்படும் DTE சான்றிதழ்களுக்கு இணையானது என ஏற்கும் செய்ய இயலாது என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. எனவே, ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி முடித்தவர்களின் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு, 2007–2008 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் அயல் மாநில சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு மட்டும் மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கலாம் என்றும், 2008–2009 அல்லது அதற்கு பின்னர் அயல் மாநிலங்களில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியில் சேரும் மாணவர்களின் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்ய எடுத்துக் கொள்ள தேவையில்லை என்றும், அயல் மாநில அரசு தங்கள் மாநிலத்தில் பயின்ற மாணவர்களின் சான்றிதழ்களை மதிப்பீடு செய்யக்கோரி தமிழ்நாடு அரசைக் கோரும் போது, அம்மாநில அரசு நிர்ணயித்துள்ள பாடத்திட்டத்தினை, தமிழ்நாடு மாநில வல்லுநர் குழு உற்று நோக்கி, அம்மாநிலப் பாடத்திட்டம், தமிழ்நாட்டின் பாடத்திட்டத்திற்கு இணையானது என்று பரிந்துரைத்தால் மட்டுமே அம்மாநிலத்தில் பயின்ற மாணவர்களின் சான்றிதழ்களை அரசாணை (1டி) எண்.26, பள்ளிக்கல்வித் (யு) துறை, நாள் 21.02.2003ன் படி மதிப்பீடு செய்து தமிழக அரசால் வழங்கப்படும் ஆசிரியர் பட்டயப் பயிற்சி சான்றிதழுக்கு இணையானது என சான்றளிக்கலாம் என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

7. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் மேற்படி கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று, 2007–2008 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் அயல் மாநில ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு மட்டும் மதிப்பீடு சான்றிதழ் வழங்கலாம் என்றும், 2008–2009 அல்லது அதற்கு பின்னர் அயல் மாநிலங்களில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியைப் பெறும் மாணவர்களின் சான்றிதழ்களை மதிப்பீடு செய்ய எடுத்துக் கொள்ள தேவையில்லை என்றும், அயல் மாநில அரசு தங்கள் மாநிலத்தில் பயின்ற மாணவர்களின் சான்றிதழ்களை மதிப்பீடு செய்யும்படி தமிழ்நாடு அரசை கோரும் போது, அம்மாநில அரசு நிர்ணயித்துள்ள பாடத்திட்டத்தினை, தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்துடன் ஒப்பிட்டு நோக்கி, அம்மாநிலப் பாடத்திட்டம், தமிழ்நாட்டின் பாடத்திட்டத்திற்கு இணையானது என்று சான்றளித்தால் மட்டுமே அம்மாநிலத்தில் பயின்ற மாணவர்களின் சான்றிதழ்களை அரசாணை (1டி) எண்.26, பள்ளிக்கல்வித் (டி1) துறை, நாள் 21.02.2003ன் படி மதிப்பீடு செய்து தமிழக அரசால் வழங்கப்படும் ஆசிரியர் பட்டயப் பயிற்சி சான்றிதழுக்கு இணையானது என சான்றளிக்கலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

8. இந்த ஆணையின் நகலினை அனைத்து [illegible] கல்வி அலுவலர்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கும்படி ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.

நகல்
பள்ளிக் கல்வித் துறை, எஸ், ஜிபிடி,எம், கியூ பிரிவுகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 3.12.[illegible]